(அ) கல்லணையைச் சுற்றுலாத்தலமாக்கியும் அங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு எந்த வித வசதியும் செய்யப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை–

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) கல்லணையில் அரசு அளித்த ரூ. 2.00 இலட்சத்தில் அழகிய பூங்காவும், விளையாட்டு அரங்கமும் செயல்பட்டு வருகிறது. இங்கு குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ரூ. 1.72 இலட்சம் செலவில் தோகூரில் (கல்லணை) பேருந்து நிலையமும் கழிப்பிடமும் கட்டப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக திறக்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றன.

(குறிப்பு:ஓர் உரையின் தொடக்கத்தில் * -உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை-உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

அரசுப்பணிகளில் புதிய நியமனங்களுக்குத் தடை விதித்து அரசாணை வெளியிடப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசுப்பணி நியமனங்களில் புதிய நியமனங்களுக்குத் தடை செய்திருப்பதாக ஒரு பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து அரசாங்கத்தின் பதில் பெறவேண்டுமென்று திரு. சி. ஞானசேகரன் அவர்கள் என்னிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறார். அந்தப் பிரச்சினையை மட்டும் சுருக்கமாகச் சொல்லக் கேட்டுக் கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் இனி பணியாளர்கள் நியமனம் செய்யப்படக்கூடாது என்று 27.12.1993-ல் நிதித்துறை அரசு ஆணை எண்.888-ஐ பிறப்பித்து, அரசு திடீரென்று விதித்துள்ள தடை, வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டு விரக்தியின் உச்சிக்கே சென்றுள்ள படித்த இளைஞர்களுக்கு ஒரு பேரிடியாகும். கவர்ன்மெண்டில் ஒரு பியூன் வேலை கிடைத்தாலாவது வயிற்றைக் கழுவிக் கொள்ளலாம்; திருமணம் செய்துகொண்டு சமுதாயத்திலே தலை நிமிர்ந்து வாழலாம் என்று ஏங்கித் தவிக்கும் எண்ணற்ற சகோதர சகோதரிகளின் வயிற்றில் அரசு மரண அடி கொடுத்திருக்கிறது. வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் உள்ளது. அறிவு வளர்ச்சிக்காக படிப்போரைவிட இன்று வேலைக்குச் செல்லவேண்டுமென்று சொத்தை விற்று, நகை நட்டுகளை விற்று படித்தவர்கள்தான் நம்முடைய தமிழகத்திலே அதிகம். அந்த நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளியை வைத்து நிதித் துறை அரசு ஆணை பிறப்பித்து, அல்லல்படும் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு அநீதி இழைத்துள்ளது. அண்ணன் எப்போது சாவான் திண்ணை எப்போது காலியாகும் என்ற ஒரு பழமொழி தமிழகத்திலே உண்டு. யாராவது இறந்தால் அல்லது ஓய்வு பெற்றால் உருவாகும் காலி இடங்களிலாவது நமக்கு வாழ வழி கிடைக்காதா என்று கனவு கண்டுகொண்டிருக்கும் படித்த இளைஞர்களின் கனவுகளெல்லாம் மணற்கோட்டைகளாகச் சரிந்துள்ளன. புதிதாக யாரையும், ஆட்களை அரசுப் பணியிலே எடுக்கக்கூடாது என்று, கடும் நிதிப் பற்றாக்குறை, பணிச் சுமையின் அளவு மதிப்பீடு என்ற காரணங்களைக் காட்டி, நிதித் துறை ஜீ.ஓ., போட்டுள்ளது பேரதிர்ச்சியைத் தருகிறது. புரமோஷன் செய்தால் உருவாகும் பதவிகளைக் கூட ஃபில் அப் செய்யக்கூடாது என்று கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, மகன் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுக்கு கார்டை புதுப்பிக்கச் செல்கிறபோது, அவன் தந்தையும் என் கார்டையும் புதுப்பிக்க வேண்டும் நானும் வந்து விடுகிறேன் என்று இரு தலைமுறையும் சேர்ந்தே எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுக்குப் படை எடுக்கின்ற நிலை நம்முடைய நாட்டிலே உருவாகிக்கொண்டு இருக்கிறது. அப்படியிருக்க, அரசுப் பணி நியமனம் கோரி எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுக்கோ அல்லது டி.என்.பி.எஸ்.சி.-க்கோ, நியமனம் கோரி கடிதங்களை எந்தத் துறையும் அனுப்பக் கூடாது என்று தடை ஜீ.ஓ.-விலே போடப்பட்டிருககிறது. இரு நாட்களுக்கு முன்புதான் டி.என்.பி.எஸ்.சி.-யிலே 20 ஆயிரம் பேரை தேர்விலே தேர்வு செய்து முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன, அந்த 20 ஆயிரம் பேர்களுடைய கதி என்ன ? அவர்கள் டி.என்.பி.எஸ்.சி. மூலம் எப்போது பணியிலே அமர்த்தப்படுவார்கள். வேலையில்லாத்

திண்டாட்டத்தை ஒழிப்போம் என்ற வாக்குறுதியைத் தந்து நாம் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். இப்போது அதற்கு நேர்மாறாக வேலைவாய்ப்பை அல்லவா ஒழித்து இருக்கிறோம். இதன்மூலம், இனிய கனவுகளை நெஞ்சில் சுமந்து வாழத் துடிக்கும் படித்த இளைஞர்களுக்கு மிகப் பெரிய துரோகத்தை அல்லவா நாம் செய்திருக்கிறோம். அந்த ஜீ.ஓ.-வை படித்த இளைஞர் சமுதாயம், அரசிடம் நிதி இல்லையோ அல்லது கஜானா காலியா அல்லது ஸ்தம்பித்து விட்டதா என்று தடுமாறக் கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சுருக்கமாகத்தான் சொல்லச் சொன்னேன். பெரிய விளக்கம், உங்களுடைய சொந்தக் கருத்து எல்லாம் வேண்டாம். சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வேலையில்லாத படித்த பட்டதாரிகளும் மற்றவர்களும் இன்று எதிர்நோக்கி இருக்கிற வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிற முகத்தான் இந்த ஜீ.ஓ.-வை உடனடியாக அரசு கேன்சல் செய்து, அவர்களை வேலையிலே அமர்த்துவதற்கான வழிவகை செய்யுமா என்று அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11.15

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 888, நிதித் துறை, நாள் 27.12.1993-ல் சில சிக்கன நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டி, இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது. ஆனால் இதுவொரு நிரந்தரமான அறிக்கை அல்ல. நிரந்தரமாகவே அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்று சொல்லப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட தற்காலிக தன்மையினுடைய அடிப்படையிலே சிலபல நடவடிக்கைகள், சிக்கன நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருப்பதனால், அதுவரையில் புதிதாகச் சேர்க்கப்படுகின்ற அரசுப் பணியாளர்களைச் சேர்க்காமல் நிறுத்தி வைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையிலேயே, ' The posts concerned will remain vacant till comprehensive workload assessments are made." ஆக, ஒவ்வொரு

துறையைப் பற்றி ஆராய்ந்தறிந்து, எந்தெந்தத் துறைக்கு புதிய பணியாளர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்பதை அறியவும், கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கின்ற துறைகளிலிருந்து பலபேரை எடுத்து, குறைவாக இருக்கின்ற, தேவைப்படுகின்ற துறைகளுக்கு ஒதுக்கித் தருகின்ற ஒரு நிலைமையைப் பரிசீலனை செய்வதற்காக இது தற்காலிகமாக, அடிப்படையிலே யாரும் பணியாளர்களைச் சேர்க்க வேண்டாமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதே தவிர, அதற்குமேல் பதவி உயர்வுக்காக வருகின்ற நேரத்தில் எந்தவொரு தடையும் கிடையாது. முறைப்படி ஏற்கனவே சேர்க்கப்பட்டவர்களுக்கு முறையாக என்னென்ன பதவி உயர்வுகள் உண்டோ அது முறைப்படி சேர்த்துக் கொள்ளப்பட்டு வரக்கூடும்.

ஆனால், இந்த சிக்கன நடவடிக்கைகளை மத்திய அரசும் சரி, எல்லா மாநில அரசுகளும் சரி, கடைப்பிடிக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை, இந்தியாவினுடைய மத்திய அரசுகளுடைய பொருளாதார நிலைகளைக் கூர்ந்து கவனிப்பவர்கள் நன்றாக அறிவார்கள். மத்திய அரசின் சார்பாக நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவிலேகூட எந்தெந்த வகையிலே மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதற்காக மாண்புமிகு ஒரிஸா முதலமைச்சர் பிஜூபட்நாயக் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவையே அமைத்து, அதிலே சிலபல மாநில முதலமைச்சர்களெல்லாம் இருந்து, சிக்கன நடவடிக்கைகளுக்கான விளக்கங்களைத் தரும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். அது தேசீய வளர்ச்சிக் குழுவில்கூட தன்னுடைய அறிக்கை விட்டது. அதனுடைய அடிப்படையிலே சிலபல சிக்கன நடவடிக்கைளை எல்லா மாநில அரசுகளும் கடைப்பிடிப்பதன் மூலம் பொருளாதார ஆதாரத்தைச் சிறப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக எல்லா மாநில அரசுகளும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், 1987-88-இலிருந்து வருவாய்க் கணக்கிலே செலவு-நிர்வாகச் செலவு மட்டும் ஆண்டுக்காண்டு வளர்ந்துகொண்டே போகிறது. ஒரு காலத்திலே, கிட்டத்தட்ட வருவாய்க் கணக்கிலே 35 சதவீதம் மட்டுமே எஸ்டாபிலிஷ்மெண்ட்-நிர்வாகச் செலவு என்று இருந்தது மாறி மாறி 1987-88-இல் அலுவலர்களுக்கு வழங்கக்கூடிய ஊதியங்கள் மட்டும்--ஓய்வூதியங்கள், ஊதியங்கள் மற்ற இதர சலுகைகள்-ஏற்படும் செலவு 44.99 சதவீதமாக இருந்தது மொத்த வருவாய்த் துறைக் கணக்கில்--வருவாயிலே.

அது இப்பொழுது, 1987-88இல் 44.99 சதவீத செலவாக இருந்த நிர்வாகச்செலவு 1993-94-இலே 63.89 சதவீதத்திற்கு உயர்ந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் 1987-88-இல் பொது, மொத்த வருவாயில் மக்களுக்கு நேரடியாகப் பயன்தரக்கூடிய பயன்கள் 28.93 சதவீதம்தான் செய்ய முடிந்தது. 1993-94-இலே என்ன ஆகியிருக்கிறது என்றால் 14.96 சதவீதம்தான் பொதுமக்களுக்குப் பயன் தரக்கூடிய திட்டங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்பு அரசாங்கத்தினுடைய வருவாயைப் பொறுத்து இருப்பதன் காரணமாக, உள்ளபடியே சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாக இருப்பதன் காரணமாகத்தான் இதிலே கூடுதலாக இருக்கின்ற செலவினங்களை எந்தெந்த அளவிற்குக் குறைக்கலாம் என்பதற்கு எடுக்கப்பட்டிருக்கிற ஒரு தற்காலிக ஏற்பாடு.

ஒவ்வொரு துறையைப் பற்றி ஆராய்ந்து, அதிலே கூடுதலாகப் பணியாளர்கள் இருப்பார்களேயானால் புதிதாக அந்தத் துறைக்குச் சேர்க்காமல், எந்தத் துறைக்குச் சேர்க்கப்பட வேண்டுமோ அந்தத் துறைக்குச் சேர்க்கப்பட வேண்டும் என்று ஒரு அசெஸ்மென்ட் செய்வதற்காகத்தான் இடைக்காலமாக இந்த உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இதற்குப்பிறகு இப்பொழுதுகூட-அண்மையிலே நாம் இடைக்கால நிவாரணப் பணியாக மத்திய அரசு அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுவதையொட்டி, மாநில அரசிலும்கூட அவர்களுக்கு 100 ரூபாய் ஊதியத்திலே உயர்த்திக் கொடுப்பது என்பதன் காரணமாகக் கூடுதல் செலவு மேற்கொண்டுகூட ஒரு 120 கோடி ரூபாய் நமக்கு வந்திருக்கிறது.

ஆக, எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், இது நிரந்தரமான ஒன்று அல்ல; ஏற்கனவே வேலை பார்க்கின்றவர்களுடைய புரமோஷனைப் பொறுத்தவரைவில் தடுத்து நிறுத்தாது, புதிதாக ரெக்ரூட் பண்ணுவதை மட்டும் சில காலத்திற்கு நிறுத்தி வைத்திருக்கிறது. அது நிரந்தரமாக அல்ல. சில காலத்திற்குத்தான்.

இதைப் பரிசீலனை செய்து ஒரு தக்க முடிவு ஏற்பட்டதற்குப் பிறகு, எந்தெந்த இடத்திற்குப் பணியாளர்களைச் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுமோ அந்தந்த இடத்திற்குப் பணியாளர்களைக் கட்டாயம் சேர்க்க வேண்டி வரும்.

முற்பகல் 11.20

இப்பொழுதுகூட புதிதாக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டாம், பணியிடங்களை ஏற்படுத்த வேண்டாமென்று ஒரு சட்டம்

இருந்தாலும்கூட, அவ்வப்பொழுது விதி விலக்குக் கொடுத்து, அவசியப்படுகின்ற இடத்தில் சில பல புதிய பணியிடங்களையும் நாம் தேவையைக் கருதி, வளர்ச்சி கருதி, நிர்வாகத்தினுடைய தன்மை கருதி, புதிதாக அதற்கு ஒரு தளர்வு தந்து நாம் சேர்த்துக் கொண்டுதான் வருகிறோம். அந்த அடிப்படையில்--இது நிரந்தரமாக அல்ல; யாரையும் பாதிக்கக்கூடிய அளவிலேயும் அல்ல--மாநில அரசினுடைய பொருளாதார நிலையை நாம் கட்டுப்படுத்த வேண்டி இருக்கிறது. உறுப்பினர் கேட்டார்: கஜானா காலியாகி விடுமா; கஜானா எப்படி இருக்கிறது என்று கேட்டார். இந்தப் போக்கு, இப்படியே போகுமேயானால் காலிதான் ஆகும். ஏனென்றால், மேற்கு வங்காளத்திலேகூட சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. கேரளாவிலேகூட, டிரஷரியை மூன்று நாட்கள் பூட்டி வைக்கவேண்டிய அளவிற்கு அந்த அரசு ஆளாகி, செலவினத்தை ஈடுகட்ட முடியாத நிலைமைக்கு வந்தது. காரணம், 27-12-1993 அன்று செய்தித்தாள்களிலே வந்த அளவுக்கு ஆந்திரப்பிரதேசத்தினுடைய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ரோசைய்யா அவர்கள் அந்த மாநிலத்தினுடைய சிக்கன நடவடிக்கையைப் பற்றிச் சொல்கிறபோது, "Since the expenditure on establishment is already 105 per cent of the own tax and non-tax revenues of the State, it can be seen that between the expenditure and our non-plan expenditure, the Government would have exhausted most of the resources. In such a situation, the employees of the State will not be getting salaries on time and eventually they will not be getting their full salaries also." அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆந்திரப் பிரதேசமே வந்திருக்கிறது. `The Finance Minister gave these facts in the Statement of Objects and Reasons for the Bill to regulate the appointment, prohibit appointment in offices and establishments under the control of the State Government' என்று நாம் எப்படி தடை விதிக்கிறோமோ அப்படி தடை விதிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆந்திர மாநிலம்கூட வந்திருக்கிறது. இதேநிலை நீடிக்குமேயானால், சம்பளமே கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், பல மாநிலங்களில் இத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதை மத்திய அரசும் வற்புறுத்துகிறது. தேசிய வளர்ச்சிக் குழுவும் சொல்லியிருக்கிறது. ஏராளமான அளவுக்குப் பணியாளர் இடங்களை ஏற்படுத்திக் கொண்டே போவேமேயானால், வேலைவாய்ப்பு ஏற்படும்; அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்குமே தவிர, அரசாங்கத்தை நடத்துவது என்பது, கடினமாக இருக்கும். ஆகவேதான், இதில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய முழு ஒத்துழைப்பு வேண்டும். புதிய புதிய பதவிகள் ஏற்படுத்துவதற்கான யோசனைகளையெல்லாம்

தயவுசெய்து சொல்லாமல் இருப்பது நல்லது. இம்மாதிரி செலவினங்களுக்கு வழிவகை வைக்காமல், ஒத்துழைப்புத் தருகிற அளவுக்கு மாண்புமிகு திரு. ஞானசேகரன் போன்றவர்கள்— அவருக்குப் பெயரே ஞானசேகரன் என்று இருப்பதன் காரணமாக, 'சேகரம்' என்றால் கடல், 'ஞானம்' என்றால் அறிவு; அறிவே கடலாக அவர் இருப்பதன் காரணமாக--அவர்கள் பெரும் ஒத்துழைப்பும், உதவியும் தருவார் என்கிற நிலைமையில், இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தந்தால்தான், மாநிலத்தினுடைய பொருளாதார நிலையை வளர்ச்சித் திட்டங்களுக்கு, மக்களுடைய வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு எதிர்காலத்திலே பயன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல்; திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாகக் குழுவின் *145* முதல் *147* வரையிலான மூன்று அறிக்கைகளை இப்பேரவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரி விதிப்பு (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.